ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருச்சிறுபுலியூர்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருச்சிறுபுலியூர்

## பொதுத்தனியன்கள்

ராமாநுஜ த$_3$யாபாத்ரம் ஜ்ஞாநவைராக்$_3$ய பூ$_4$ஷணம் |
ஸ்ரீமத்$_3$வேங்கடநாதா$_2$ர்யம் வந்தே$_3$ வேதா$_3$ந்ததே$_3$ஶிகம் || 1 ||

ஸ்ரீஶைலேஶ த$_3$யாபாத்ரம் தீ$_4$ப$_4$க்த்யாதி$_3$கு$_3$ணார்ணவம் |
யதீந்த்$_3$ரப்ரவணம் வந்தே$_3$ ரம்யஜாமாதரம் முநிம் || 2 ||

லக்ஷ்மீநாத$_2$ஸமாரம்பா$_4$ம் நாத$_2$யாமுநமத்$_4$யமாம் |
அஸ்மதா$_3$சார்யபர்யந்தாம் வந்தே$_3$ கு$_3$ருபரம்பராம் || 3 ||

யோ நித்யமச்யுதபதா$_3$ம்பு$_3$ஜயுக்$_3$மருக்ம -
வ்யாமோஹதஸ்ததி$_3$தராணி த்ரு’ணாயமேநே |
அஸ்மத்$_3$கு$_3$ரோர்ப$_4$க$_3$வதோஸ்ய த$_3$யைகஸிந்தோ$_4$:
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்$_3$யே || 4 ||

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூ$_4$தி:
ஸர்வம் யதே$_3$வ நியமேந மத$_3$ந்வயாநாம் |
ஆத்$_3$யஸ்ய ந: குலபதேர்வகுளாபி$_4$ராமம்
ஸ்ரீமத் தத$_3$ங்க்$_4$ரியுக$_3$ளம் ப்ரணமாமி மூர்த்$_4$நா || 5 ||

பூ$_4$தம் ஸரஶ்ச மஹதா$_3$ஹ்வய ப$_4$ட்டநாத$_2$
ஸ்ரீப$_4$க்திஸார குலஶேக$_2$ர யோகி$_3$வாஹாந் |
ப$_4$க்தாங்க்$_4$ரிரேணு பரகால யதீந்த்$_3$ர மிஶ்ராந்
ஸ்ரீமத் பராங்குஶமுநிம் ப்ரணதோஸ்மிநித்யம் || 6 ||

## பெரியாழ்வார் தனியன்கள்

கு$_3$ருமுக$_2$மநதீ$_4$த்ய ப்ராஹ வேதா$_3$நஶேஷாந்
நரபதிபரிக்லு'ப்தம் ஶுல்கமாதா$_3$துகாம: ।
ஶ்வஶுரமமரவந்த்$_3$யம் ரங்க$_3$நாத$_2$ஸ்ய ஸாக்ஷாத்
த்$_3$விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ॥

மின்னார் தடமதிள்சூழ் வில்லிபுத்தூரென்றொரு கால் ⋆
சொன்னார் கழற்கமலம் சூடினோம் ⋆ - முன்னாள்
கிழியறுத்தான் என்றுரைத்தோம் ⋆ கீழ்மையினிற் சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமே ! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்று ⋆
ஈண்டிய சங்கம் எடுத்தூத ⋆ வேண்டிய
வேதங்களோதி ⋆ விரைந்து கிழியறுத்தான் ⋆
பாதங்கள் யாமுடைய பற்று

## பெரியாழ்வார் திருமொழி – திருப்பல்லாண்டு

‡ பல்லாண்டு பல்லாண்டு ⋆ பல்லாயிரத்தாண்டு ⋆
பல கோடி நூறாயிரம் ⋆
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா ! ⋆ உன்
சேவடி செவ்வி திருக்காப்பு ॥ **1.1.1** ॥

‡ அடியோமோடும் நின்னோடும் ⋆
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு ⋆
வடிவாய் நின் வல மார்பினில் ⋆
வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு ⋆
வடிவார் சோதி வலத்துறையும் ⋆
சுடராழியும் பல்லாண்டு ⋆

படை போர் புக்கு முழங்கும் ⋆
அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே ॥ **1.1.2** ॥

வாழாட் பட்டு நின்றீருள்ளீரேல் ⋆
வந்து மண்ணும் மணமும் கொண்மின் ⋆
கூழாட் பட்டு நின்றீர்களை ⋆
எங்கள் குழுவினில் புகுதலொட்டோம் ⋆
ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள் ⋆
இராக்கதர்வாழ் ⋆ இலங்கை
பாழாளாகப் படை பொருதானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.3** ॥

ஏடுநிலத்தில் இடுவதன் முன்னம் வந்து ⋆
எங்கள் குழாம் புகுந்து ⋆
கூடு மனமுடையீர்கள் வரம்பொழி ⋆
வந்தொல்லைக் கூடுமினோ ⋆
நாடு நகரமும் நன்கறிய ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பாடு மனமுடைப் பத்தருள்ளீர் ! ⋆
வந்து பல்லாண்டு கூறுமினே ॥ **1.1.4** ॥

அண்டக்குலத்துக்கதிபதி ஆகி ⋆
அசுரர் இராக்கதரை ⋆
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த ⋆
இருடீகேசன் தனக்கு ⋆
தொண்டக் குலத்திலுள்ளீர் ! வந்தடி தொழுது ⋆
ஆயிர நாமம்சொல்லி ⋆

sunder kidambi prapatti dot com sunder kidambi

பண்டைக் குலத்தைத் தவிர்ந்து ⋆
    பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே ॥ **1.1.5** ॥

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ⋆
    ஏழ் படி கால் தொடங்கி ⋆
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம் ⋆
    திருவோணத் திருவிழவில்
அந்தியம் போதில் அரியுருவாகி ⋆
    அரியை அழித்தவனை ⋆
பந்தனை தீரப் பல்லாண்டு ⋆
    பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே ॥ **1.1.6** ॥

தீயிற் பொலிகின்ற செஞ்சுடராழி ⋆
    திகழ் திருச்சக்கரத்தின் ⋆
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று ⋆
    குடிகுடி ஆட்செய்கின்றோம் ⋆
மாயப் பொருபடை வாணனை ⋆
    ஆயிரந் தோளும் பொழி குருதி
பாய ⋆ சுழற்றிய ஆழி வல்லானுக்குப் ⋆
    பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.7** ॥

நெய்யிடை நல்லதோர் சோறும் ⋆
    நியதமும் அத்தாணிச் சேவகமும் ⋆
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு ⋆
    காதுக்குக் குண்டலமும் ⋆
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து ⋆
    என்னை வெள்ளுயிராக்க வல்ல ⋆

prapatti.com sunder kidambi sunder kidāmbi

பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப் ⋆
    பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.8** ॥

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை உடுத்துக் ⋆
    கலத்ததுண்டு ⋆
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன ⋆
    சூடுமித்தொண்டர்களோம் ⋆
விடுத்த திசைக்கருமம் திருத்தித் ⋆
    திருவோணத் திருவிழவில் ⋆
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப் ⋆
    பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.9** ॥

எந்நாள் எம்பெருமான் ⋆
    உன்தனக்கடியோம் என்றெழுத்துப்பட்ட
அந்நாளே ⋆ அடியோங்கள் அடிக்குடில் ⋆
    வீடுபெற்றுய்ந்ததுகாண் ⋆
செந்நாள் தோற்றித் ⋆
    திருமதுரையுள் சிலைகுனித்து ⋆ ஐந்தலைய
பைந்நாகத் தலை பாய்ந்தவனே ! ⋆
    உன்னைப் பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.10** ॥

‡ அல்வழக் கொன்றுமில்லா ⋆
    அணிகோட்டியர் கோன் ⋆ அபிமான துங்கன்
செல்வனைப்போலத் ⋆
    திருமாலே ! நானும் உனக்குப் பழவடியேன் ⋆
நல்வகையால் நமோ நாராயணாவென்று ⋆
    நாமம் பல பரவி ⋆



prapatti dot com
sunder kidāmbi

பல்வகையாலும் பவித்திரனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுவனே ‖ **1.1.11** ‖

‡ பல்லாண்டென்று பவித்திரனைப் ⋆
பரமேட்டியை ⋆ சார்ங்கம் என்னும்
வில்லாண்டான் தன்னை ⋆
வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பியசொல் ⋆
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பல்லாண்டும் பரமாத்மனைச் ⋆
சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே ‖ **1.1.12** ‖

## பெரிய திருமொழி – கள்ளம் மனம்

‡ கள்ளம் மனம் விள்ளும் வகை ⋆ கருதிக் கழல் தொழுவீர் ⋆
வெள்ளம் முது பரவைத் ⋆ திரை விரிய ⋆ கரையெங்கும்
தெள்ளும் மணி திகழும் ⋆ சிறு புலியூர்ச் சலசயனத்
துள்ளும் ⋆ எனதுள்ளத்துள்ளும் ⋆ உறைவாரை உள்ளீரே ‖ **7.9.1** ‖

தெருவில் திரி சிறு நோன்பியர் ⋆ செஞ்சோற்றொடு கஞ்சி
மருவி ⋆ பிரிந்தவர் வாய்மொழி ⋆ மதியாது வந்தடைவீர் ⋆
திருவிற் பொலி மறையோர் ⋆ சிறுபுலியூர்ச் சலசயனத்து ⋆
உருவக் குறள் அடிகள் ⋆ அடி உணர்மின் உணர்வீரே ‖ **7.9.2** ‖

பறையும் வினை தொழுதுய்மின் நீர் ⋆ பணியும் சிறு தொண்டீர் ! ⋆
அறையும் புனல் ஒரு பால் ⋆ வயல் ஒரு பால் பொழில் ஒரு பால் ⋆
சிறை வண்டின மறையும் ⋆ சிறுபுலியூர்ச் சலசயனத் -
துறையும் ⋆ இறையடியல்லது ⋆ ஒன்றிறையும் அறியேனே ‖ **7.9.3** ‖

வானார் மதி பொதியும் சடை⋆ மழுவாளியொடொரு பால்⋆
தான் ஆகிய தலைவன் அவன்⋆ அமரர்க்கதிபதியாம்⋆
தேனார் பொழில் தழுவும்⋆ சிறுபுலியூர்ச் சலசயனத் -
தான் ஆயனது⋆ அடியல்லது⋆ ஒன்றறியேன் அடியேனே ॥ **7.9.4** ॥

நந்தா நெடு நரகத்திடை⋆ நணுகாவகை⋆ நாளும்
எந்தாய் ! என⋆ இமையோர் தொழுதேத்தும் இடம்⋆ எறிநீர்ச்
செந்தாமரை மலரும்⋆ சிறுபுலியூர்ச் சலசயனத்து⋆
அந்தாமரை அடியாய் !⋆ உனதடியேற்கருள் புரியே ॥ **7.9.5** ॥

முழுநீலமும் அலர் ஆம்பலும்⋆ அரவிந்தமும் விரவி⋆
கழுநீரொடு மடவார் அவர்⋆ கண் வாய் முக மலரும்⋆
செழு நீர் வயல் தழுவும்⋆ சிறுபுலியூர்ச் சலசயனம்⋆
தொழுநீர்மையதுடையார்⋆ அடி தொழுவார் துயரிலரே ॥ **7.9.6** ॥

‡ சேயோங்கு தண்⋆ திருமாலிருஞ்சோலை மலை உறையும்
மாயா⋆ எனக்குரையாய் இது⋆ மறை நான்கின் உளாயோ⋆
தீயோம் புகை மறையோர்⋆ சிறுபுலியூர்ச் சலசயனத்
தாயோ⋆ உனதடியார் மனத்தாயோ⋆ அறியேனே ॥ **7.9.7** ॥

மையார் வரி நீலம்⋆ மலர்க் கண்ணார் மனம் விட்டிட்டு⋆
உய்வான் உன கழலே⋆ தொழுதெழுவேன்⋆ கிளி மடவார்
செவ்வாய் மொழி பயிலும்⋆ சிறுபுலியூர்ச் சலசயனத்து⋆
ஐவாய் அரவணைமேல்⋆ உறை அமலா ! அருளாயே ॥ **7.9.8** ॥

‡ கருமா முகில் உருவா !⋆ கனல் உருவா ! புனல் உருவா⋆
பெருமால் வரை உருவா !⋆ பிறவுருவா ! நினதுருவா !⋆
திருமா மகள் மருவும்⋆ சிறுபுலியூர்ச் சலசயனத்து⋆
அருமா கடல் அமுதே !⋆ உனதடியே சரணாமே ॥ **7.9.9** ॥

‡ சீரார் நெடு மறுகில் ⋆ சிறுபுலியூர்ச் சலசயனத்து ⋆
ஏரார் முகில் வண்ணன் தனை ⋆ இமையோர் பெருமானை ⋆
காரார் வயல் மங்கைக்கிறை ⋆ கலியன் ஒலி மாலை ⋆
பாரார் இவை பரவித் தொழப் ⋆ பாவம் பயிலாவே ‖ **7.9.10** ‖

திரு திருமாமகள் நாச்சியார் ஸமேத அருள்மாகடல் திருவடிகளே ஶரணம்

sunder kidambi prapatti dot com sunder kidāmbi